௩

# — சிதம்பரப்பிள்ளை —

## செந்தமிழ் நினைவு

செள்மிய சித்திரை சாரமா வாசையே
எம்மியல் என்றும் இருண்மூட—நம்முடைத்
தந்தை சிதம்பரப் பிள்ளை தரணிவிட்டுத்
தந்திமுகன் தாள்சேர்ந்த நாள்.

பொதிகை,
கரவெட்டி

2-5-1969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பேரா இயற்கைப் பெருவாழ்வில்......

செங்குந்த சீலன்



# வேதவனம் — சிதம்பரப்பிள்ளை

தோற்றம் :
16-4-1903

மறைவு :
16-4-1969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



**யார்க்கரு :**

## யார்க்கரியானெம் யார்க்கருவான்.

**— சிவலிங்கன் —**

மருதநில மத்தியிலே கோயில் கொண்டு
மறுபிறவி நோயகற்று மைய நின்னை
உருகியுளம் பெருகியன்புப் பாசத் தோடு
உற்றவரும் மற்றவரு முதவாரென்று
கருகியுடல் கனலோடு கலக்கு மட்டும்
கணபதியே உனைத் தினமும் மறந்திடாது
பெருகுணர்வை உந்தனுக்குத் தந்த தாதை
பேரின்ப வாழ்வினையே பெறுதல் வேண்டும்.

தென்னை இளங் கீற்றிலெழும் தென்றற் காற்று
தெளிந்தநறுந் தேனனைய கேணி யூற்று
அன்னைகலை வாணியருள் கல்விச் சாலை
அன்னமளிக் கின்றபல அன்ன சாலை
இன்னபிற செல்வமுடை எழில்கள் சூழும்
எற்றமுறு யார்க்கருவி லமர்ந்த தேவே
தன்னைஉனக் கென்று மலர்த் தாளடைந்த
தந்தையருள் பெற்றிடநீ தயை செய்வாயே.

சாவடக்கம் செய்கின்ற சுடுகா டோடு
சார்ந்துவரு நீரோடை சார்ந்த தோட்டம்
தாவடத்தி னூடுவரும் பசுக்கள் கூட
தாகத்தை யார்க்கருவிற் தணிக்கு மைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவடத்தைச் சாற்றி யுனைப் பூசிப்போரும்
புலம்புகிருர் வாய்நிறைய ஏதோ கூறி
பாவடத்தைச் சாற்றி நிதம் பாடுகின்ருேம்
பாதார விந்தத்தைத் தந்தைக் கீயே.

பணம்பேசு மிடத்தினிலே உண்மை யோடிப்
பதுங்கிவிடு மதனுலே எமது தந்தை
பணந்தேடிச் சேமித்துப் பாவ மூட்டை
படுமுடிச்சுப் போட் டதனைக் கட்டிடாது
குணந்தேடிக் குறைநீக்கிக் குறை வில்லாது
குளிர் காய நெருப்பண்டை வருதல்போல
மணந்தோடி உன்னடிக்கு வந்தா ரையா
மாருத பேரின்பம் பெறுதல் வேண்டும்.

வேறு

முற்றிப் பழுத்து முதிர்ச்சிமிக
முதுகை வளைக்கும் புதிர்ச்செந்நெல்
சுற்றி வளைத்துன் பதமலரைச்
சுகமே கவரி நிதம்வீச
பற்றை வளர்த்துப் பழங்கள்மிகும்
பச்சைப் பூங்கா வனத்திருத்தும்
பெற்ற தந்தை பேரின்பம்
பெறநீ யருளல் பெரிதாமோ.

பச்சை மயில்மீ திச்சையுடன்
பவனி வருமச் செங்குந்தன்
இச்சைப் படியே வள்ளியினை
ஏற்க அருளும் யார்க்கருவே
பச்சை யன்புப் பாசத்தாற்
பதறு மெம்மைப் பாருக்கு
எச்சமாகத் தந்து விட்டு
வந்தா னெந்தை வாழ்வுறவே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேறு

அரசுடன் வேம்பு அணைந்தொரு பாங்கு
அர்த்தநா ரீச்சுரர் போல
பரவியும் படர்ந்தும் பல்வளம் பல்கும்
பதி! அது யார்க்கரு! நெஞ்சே
அருமருந் தனைய அப்பதி நின்று
யார்க்கரி யானெம் யார்க்கரு வானெனப்
பெருகுறு முணர்வில் தன்னுயிர் காத்த
பீடுறு தந்தையைப் பேணுவன் நீபோ.

●

## அத்துளு அம்மன் :

### அத்துளுத் தாய்க்கோ அருட்பஞ்சம் ?

**புலவர் கருணையூர் யோகன்**

முத்தே! முதலே! முக்கனியே
முடிவே யில்லாத் தத்துவமே
அத்துளு அம்மையே! நின்னடிகள்
அகமே குளிர வழுத்துவனே:
செத்தேனென அழுங் கண்மணிகள்
சித்தம் மகிழத் தெளிவுபெற
நித்தம் வாழ்வில் அமைதியுற
நின்னரு ளென்றும் விளங்குகவே!

வற்று நின்னருட் பொய்கையிலே
வந்து நன்றே நீராடிப்
பற்றிய வினைகள் முற்றறநான்
பலநா ளுன்னொடு போராடி
உற்றேன் முடிவில் பேரின்பம்
உன்னரு ளல்லை உரைப்பேனோ!
நற்றே னேயென் குலம்வாழ
நன்றே நின்னருள் பரவுகவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டு மரங்கள் மத்தியிலே
காட்சி யளிக்கும் நாயகியே!
காட்டி லெறித்த நிலாவாக நின்
கருணை ஒளியும் வீணல்ல;
நாட்ட முடனே வருகின்ற
நம்பியர் நங்கைய ரனைவரதும்
வாட்டம் நீங்க வாழ்வுபெற
வழிகாட் டுவதுன் பேரருளே.

அந்தி வேளை நீர்மெள்ள
அத்துளு வந்திடும் சுந்தரிகள்
அந்திக் காலம் வரும்முதியோர்
ஆங்கே நிற்கும் இளைஞர்கள்
முந்தி வராத பலருக்கும்
முடிவி லின்பங் கிட்டுமெனின்
வந்து வணங்கு மென்மக்கள்
வாழ, நின்னருள் கிட்டாதோ.?

பத்திரகாளி:

## தூதென வந்தனரோ?

— கவிஞர் வே. குமாரசாமி —

கற்ற அறிஞர்க்குங் கல்லாத பேர்கட்கும் அற்புதஞ்செய்
துற்ற கொடுந்துயர் முற்றுங் களைந்தும் உவப்பருளும்
கொற்ற வையே எழிற் குஞ்சரியே தமிழ்க் கோகிலமே
உற்றனரேவிண் உயர்ந்தன ரேயுன தன்பினரே!

அன்னாய் அகிலத் துயிரனைத் திற்குந்தா யானவளே
முன்னாட் புரிந்தன இன்னாள் விளைந்தன யாவையுமே
மின்னார் மருங்குல் இடர்தரினும் வந்து களைந்தருள்
பொன்னே இதுவுணர்ந் தோஇவர் ஏகினர் உன்பதமே.

விதிக்கும் விதியையும் வீழ்த்தவும் வாழ்த்தவும் வல்லவளே
கதிக்கும் துயரிடைக் காய்ந்து சருகெனத் தீந்தவருன்
பதிக்கும் வராதும் மனத்திற் பணிந்தனரேல் இன்ப
முதிக்கு மெனுமொரு பான்மையை எண்ணிப் படந்தனரோ?

தாதவிழ் கொன்றையிற் தும்பிகள் ஊதும் பொழிலிடையில்
போதவிழ் ஒத்த புனித வளன்திகழ் பொன் மலரே
மாதவர் வாழ்வை மகிழ்வொடு நல்குவை என்றதனால்
தூதென உன்னிடம் எம்நலம் நண்ணித் தொடந்தனரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லூர்:**

## " தென்படுமே பல கோபுரங்கள் "

அரியாலையூர்: வே. ஐயாத்துரை

நல்லைப் பதிதனிற் கோபுரங்கள் — கந்த
நாதனுக் கேற்றநற் கோபுரங்கள்,
சொல்லப் படுகின்ற கோபுரங்கள் — வேறு
சோடித்துச் செல்கின்ற கோபுரங்கள்.

ஆதி முதற்தொட ரந்தம்வரை — நல்ல
ஆக்க மிகுந்திடும் சித்திரம்சேர்
சேதி சொல்லுமிரு கோபுரங்கள் — இப்போ
தெற்கும் கிழக்கும் நிலைபெற்றதே

கற்களி னுற்கட்டிச் சாந்துமிட்டுப் — பல
காட்சிக ளேமிளிர் கோபுரங்கள்
சிற்பிகள் செய்தனர் நல்லையிலே — கலைத்
தேர்ச்சி நிறைந்து விளங்கிடவே

வீதி சுற்றிவரும் கோபுரங்கள் — எங்கள்
வேலவ னேறிடும் கோபுரங்கள்
சோதி விளங்கிடும் கோபுரங்கள் — அவை
சோபித மாகிய சப்பரங்கள்.

மூன்று முகப்புக ளேபொருந்தி — மலர்
மொய்க்கும் அழகிய கோபுரமே
தேன்றிடும் கார்த்திகை உற்சவத்தில் — அது
தூ யமணம் வீசும் சப்பரமே.

ஆதியோ டந்தம் மரம் திரையாற் — கட்டி
ஆக்கிய தோருயர் கோபுரமே
மாதிரு பேரும் எழுந்தருள — எங்கள்
மால்மரு கன்வரும் சப்பரமே.

ஆடி வருகின்ற கோபுரங்கள் — அசை
யாத நிலைபெற்ற கோபுரங்கள்
தேடி வரும்அடி யார்களுக்கே — எங்கும்
தென்படு மேபல கோபுரங்கள்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிர்காமம்:

# விண்ணோர் விரும்பும் வேலன் பதி.

கவிஞர் இ. நாகராஜன்

பற்றைத் துறந்து பரமனடி பற்ற விழைந்தும் பண்டையப்பண்
புற்ற வுளத்தால் உலகுய்ய உவந்தே நீரால் உயிரூட்டி
கற்றூர் வியக்க மாணிக்க கங்கை அலையாம் கரம்வீசி
முற்றூ முருகன் முருகுறையும் மூவாக் கதிரைப் பதிமேவும்

குயில்கள் மரமாக் கொம்பிருந்து குளிரார் தமிழிற்கூவ மட
மயில்கள் மலர்சேர் காவிடுத்து மட்டில் வனப்பார் தோகைவிரித்
தயிலார் முருகன் அடிதொழுதாங் கன்பாற் பித்துற் றழகு நடம்
பயிலும் எழிலும் பல்வளமும் பாங்காய் ஓங்கும் கதிர்காமம்

கிள்ளைக் கானம் கிளைவிடுத்து கிளர்ந்தே வானிற் பறந்தோடி
உள்ளங் களிக்கப் பாடுமொலி உம்பர் செவியிற் கேட்க அவர்
மெள்ள முகிலாம் ஊர்தியிலே மேவிக் குமரன் கோட்டமதின்
கொள்ளை அழகில் உளங்குழைவார் குறுகார் மீண்டும் விண்ணுலகே

புள்ளி மான்கள் புலமெல்லாம் புகுந்து புல்லைப் புசிக்காது
துள்ளிப் பள்ளிச் சிறுவரெனச் சோம்பலின்றித் துரித முடன்
வள்ளிக் கணவன் வாழ்பதிக்கு வந்தே வனப்பிற் கட்டுண்டு
உள்ளம் உணர்வு ஒடுங்கியருள் உண்மை உணர்ந்து அமைதிபெறும்.

சின்னஞ் சிறிய விதையுள்ளே தேங்கிக் கிடந்த சீர்சக்தி
பென்னம் பெரிய ஆலாகி பீடார் கிளைகொள் வதுபோல
சின்னப் பாலன் தேவர்களின் தீராத் துயரம் தீர்த்தருளி
இன்னி லத்தோர் இடர்களைய இருக்கை கொண்ட கதிர்காமம்,

தேனுந் தினையும் சேர்ந்திழையும் செய்யிற் செந்நெல் செழித்துயரும்
மானும் குயிலும் மயிலினமும் மருவிக் காதற் கூத்தயரும்
ஞானம் பெறவே நல்லடியார் நண்ணி அகத்தின் 'நா' னழிய
ஊன மிலனும் உம்பர்பரன் உண்மை யொளியில் உரம் பெறுவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிர்காமம்:-

### கதிர்காமத் துறைகின்ற கந்தப் பெருமானே

— காரை. செ. சுந்தரம்பிள்ளை —

ஓடிவரும் மாணிக்க கங்கை யருகுள்ள
ஓங்குபுகழ் தாங்கு கதிரைப்பதியி லென்றும்
நாடிவரும் பக்தரிடர் நாசமறுக் கின்ற
ஞானகுரு வானவடி வேலவா போற்றி
தேடியருள் பாலிக்கும் தெய்வமே எங்கள்
சிவசுப்ர மணியனே சிறீகந்த வேளே
**வாடிமெலி கின்ற எமை யாட்கொள்ள வேண்டும்**
வடிவாம்பிகை பெற்ற வள்ளிமண வாளா.

சங்கரன் நெற்றியில் கனலாகத் தோன்றிச்
சரவணப் பொய்கையில் தமிழ்த் தெய்வமாகி
செங்கனி இதழோடு சிரம் ஆறு கொண்டு
திகழ்கின்ற ஈராறு கரத்தோடு வந்தே
பொங்கசுரர் குலம்மாய்த்த பொருவிலாச் சேயே
பொடிபடக் கிரவுஞ்ச மலைகொன்ற வேலே
திங்களணி செய்யும் உமைபாகர் மகிழ் வெய்தச்
செப்புபிர ணவப்பொருட் டிறம்சொன்ன குருவே.

ஆதியாய் அந்தமாய் அநாதியாய் எங்கள்
அப்பனாய் அன்னையாய் அனைத்துமாய் நின்றே
சோதியாய் மிளிர்கின்ற சுந்தரக் குமரா
தோன்றாத துணையாக நிற்கின்ற முருகா
பேதியா தருள்கின்ற பெம்மானே ஞானப்
பேரொளிப் பிழம்பாக ஒளிர்கின்ற செல்வா
**யாதுமறி யாதஎனை ஆட்கோள்ள வேண்டும்**
ஆறுபடை வீட்டிலுறை ஆறுமுக வேலா.

அச்சம் தவிர்க்கின்ற வேல்கொண்டு வருவாய்
அடியார்க்கு நல்லனே அருள்மாரி பொழிவாய்
இச்சைக் கிலக்காக்கி வாழ்கின்ற எம்மை
ஈடேறச் செய்கின்ற உபாயங்கள் கூறாய்
பச்சைநிற மஞ்ஞைமிசை பவனிநீ வருவாய்
**பாவியெமை யாட்கொண்டு பவமறுத் தருள்வாய்**
கச்சணியும் மாதுகுற வள்ளிமண வாளா
கதிர்காமத் துறைகின்ற கந்தபெருமானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லிபுர ஆழ்வார்:

## வைகுந்தம் வேண்டும் வரம்.

— தமிழ்நாடன் —

காயாம்பூ எழில்மேனி வண்ணங் கண்டு
கவிபாடும் பேராழி யதனிற் கண்டு
ஓயாது ஒலியெழுப்பும் சங்கம் கண்டு
ஒருகையில் சக்கரத்தின் ஓர்மங் கண்டு
வாயாகக் கண்ணாக உந்தி யாக
வளரடிகள் வடிவாகக் கமலங் கண்டு
பேயாகி யுனிற்கலந்தார் தந்தை கண்ணா
பெற்றியிது பொய்யென்று பேசு வாயோ?

வல்லிபுரக் கோவில்வழி பாடுபண்ணி
வந்துவிட்டார் எங்களையா அம்மா சிந்தும்
முல்லைமலர்ச் சிரிப்புக்குக் குறும்பு பண்ணும்
மூச்சோடு நிற்கின்றார் அம்மா பக்கம்
நல்லவர்கள் குறுக்காலே போவார் கள்ளவ்
நாகரிக நிலைகண்டு நாக்கு நீட்டி
தொல்லையிலாக் **கண்ணன்**'அவ' தாரமென்று
துல்லியமாய்ப் பேசுவதும் பொய்யோ கண்ணா!

சிவலிங்கப் பூசைபண்ணிச் சிறப்புப் பெற்ற
செய்திமறந் திடாயென்று நினைக்கின் றோம்நாம்
சிவலிங்கம் தந்தவனை முற்றாய் நெஞ்சில்
சிந்தனையில் வைத்திருப்பாய் கடமை கண்ணா!
அவலிங்கென் றுரல்தன்னை இடிக்கும்நல்ல
அறிவாளர் வாழ்கின்ற அவனி தன்னில்
சிவலிங்க வாலிருக்கத் தும்பைக் கொண்டு
செவியாரக் கோவிந்தா என்றோ ரோசொல்.

மற்றவரின் நெற்றியிலே நாமந்தீட்டி
மடைப்பட்டங் கட்டிவிடும் இந்நாளில்
சுற்றி நிற்கும் கருமுகில்கள் சூழும் நெற்றி
சுந்தரமாய் நாமத்தைத் தனக்கே வைத்து
கற்றவர்கள் ''தம்பீவா'' என்று சொல்லக்
கனிவோடு புன்முறுவல் கணக்கி லாமல்
முற்றமெலாம் பெருக்கெடுக்க வாழ்ந்த ஐயா
முதுமையிலுமுனை யறிந்து காணோம் கண்ணா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லிபுர ஆழ்வாரே ஆழ்வா ரென்று
வாணளை உனக்காக அர்பணித்துத்
தொல்லைதரும் பாம்புகளின் துடக்கு நீக்கி
துள்ளிஇசை பாடுகின்ற வானம் பாடி
எல்லையிலா இன்பத்தி லமுந்தல் போல
எந்நாளும் சுதந்திரமாய்ப் பறந்த பட்சி
நல்லதொரு வசந்தம்பூக் கின்றவேளை
நமன்கையிற் பட்டதுவே! நவையென் செய்தோம்.

கண்மூடிப் பழக்கமெலாம் குருத்து விட்டு
காடாகக் கலிக்கின்ற கலியு கத்தில்
விண்மூடும் அழகையெலாம் வெளியிற் காட்ட
விருப்போடு மண்மூடும் விந்தை கண்டு
கண்மூடித் தியானத்தில் ஆழும் அன்பர்
கதிகாட்டும் வல்லிபுரக் கோயில் கொண்ட
பண்மூடும் காவியத்தின் கண்ணு நின்னை
பரவியது வீணுமோ? பரவு கின்றோம்.

நீலச்சேட் டைவிட்டு நீங்கா நெஞ்சம்
நின்னேடு புரண்டுருண்டு குடும்பம் போல
வாலைச்சேட் டைவிட்டு வளர்ந்த பின்பும்
வளமாரும் வல்லிபுரக் கோயில் வந்து
காலைச்சோட் டைதீர்க்கும் எங்கள் ஐயா
காலன்கைப் படுவாரோ கவலை யற்றோம்
மேலைச்சேட் டைபோலும் மின்னிற் றையோ.
மெல்லவந்த மழைகண்ணிற் பாட்ட மாச்சே.

காரோடும் நிறமென்று கண்டோ கண்ணு
காரோடு வந்துனது காலில் வீழ்ந்து
பேரோடு திரும்புகின்ற எங்கள் ஐயா
பேரோடு கொண்டலையாப் பேறு பெற்றூர்
ஆரோடு சொல்லுவம்நாம் ஐயா பண்பை
அலறவிட்டுப் போய்விட்டார் மனிதனின்று
வேரோடு பூக்களுமே மணக்க வைத்தார்
வேதாந்த கீதைநா ராய ணுபார்.

## வே று

மண்ணிலாக் கொட்டை வாங்கி
மகிழ்ச்சியில் உடைத்து வித்தை
மண்ணிலா போடு வார்கள்
மலர்வுறும் வாயி ருப்ப?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிலா வான ரங்கள்
இங்குன்நின் சேவைக்காக
எண்ணிலா வாறு நிற்கும்
இரங்கனே இரங்காயேநீ!

சிதம்பரப் பிள்ளை எங்கே
சென்றனர் என்று கேட்டால்
அவம்பிடித் துழலும் நாங்கள்
அழுவதை யன்றி வேறு
தலம் பிடித் துழலா ஐயா
தனஞ்செயன் தோழன் பாதம்
நிதம்பிடித் துறங்கு கின்றார்
எனும்விடை நல்கச் செய்வாய்.

### ஏற்றமும் தேற்றமும்

ஏற்ற மளிப்பது எம்மவ ருக்குத்
தேற்றம தென்னில் தெருவுரை யாமோ
கூற்றம் உதைக்கும் பிஞ்ஞக னைத்தொழல்
ஏற்றம் எதற்கும் தேற்ற மளிக்கும்.

## நன்றி

எமது தந்தையாரின் மறைவின்போது வருகை தந்தவர்களுக்கும், அனுதாபம் அனுப்பியவர்களுக்கும், அந்தியேட்டியின்போது வந்தவர்களுக்கும் நினைவு வெளியீட்டுக்கெனச் சிரமம்பாராது செய்யுள் தந்த பண்டிதர் க. வீரகத்தி, கவிஞர் இ. நாகராஜன், காரை சுந்தரம் பிள்ளை, அரியாலையூர் ஐயாத்துரை, வே. குமாரசாமி, கருணையூர் யோகன் ஆகியோருக்கும் இந்நினைவுக்கு நிறைவான உதவியளித்த யாழ். இலக்கிய வட்டச் செயலாளர் யாழ்வாணன் அவர்களுக்கும் எம் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள
மக்கள்

பொதிகை,
கரவெட்டி,
2-5-69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்கள்
அச்சு வேலைகள்
அனைத்துக்கும்

**தமிழ்ப்பூங்கா அச்சகம்**

நெல்லியடி ★ கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org